[1979 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தொடர்ந்து நாளை பேசுங்கள்.

திரு. க. அன்பழகன் : நீங்கள் பொறுத்துக் கொள்வீர்கள் என்றால், இப்பொழுதே பேசி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நாளை தொடர்ந்து பேசுங்கள்.

திரு. க. அன்பழகன் : நாளைக்கு பேசும்படி அவைத் தலைவரவர்கள் தெரிவிக்கிற காரணத்தால் நான் தெரிவித்த கருத்தை இன்னும் தெளிவாக நாளை தெரிவிப்பேன் என்ற நம்பிக்கையோடு இந்த அளவோடு இப்போது முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(8) பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

எதுவுமில்லை.

இணைப்பு

[270 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 341க்கான விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(ஆ) மொத்தம் 8 கோரிக்கைகள், அரசுக்கு வந்தன, அவைகள் வருமாறு :—

1. ஊழியத் தொடர்ச்சியுடன் தொடர்ந்து 180 நாட்களுக்கு மேல் பணிபுரிந்து வரும் விவசாயச் சேவைகூட்டுறவு சங்கங்களின் ஊழியர்கள், உழவர் சேவைக்கூட்டுறவுச்சங்கங்களின் ஊழியர்கள், கூட்டுறவு விவசாய வங்கியின் ஊழியர்கள் அனைவரையும் பணியில் உடன் நிரந்தரப்படுத்த வேண்டும். கூட்டுறவு பயிற்சியில்லாது பணிபுரிந்துவரும் அனைத்து ஊழியர்களையும் அவர்களது பணிக் காலத்தையே நேரடிப் பயிற்சியாக அறிவித்து சகலசலுகைகளையும் உடன் வழங்க வேண்டும். பயிற்சி இல்லாதவர்கள் என்று எந்த ஊழியரையும் வேலை நீக்கம் செய்யக் கூடாது.

1979 மார்ச் 12]

2. கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள செயலாளர், எழுத்தர், உதவியாளர் விற்பனையாளர் மற்றும் ஏவலர், இரவு காவலர் போன்ற பதவிகளுக்கு, அடிப்படைச் சம்பளம் நிர்ணயம் செய்து, இவர்களது பணியினை மையப்படுத்தி, ஒரே நிறுவனக் கட்டுப் பாட்டில் கொண்டு வருவதுடன் மத்திய கூட்டுறவு வங்கிகள் சங்கங்களை இணைத்துக் கொள்வது போல், சங்கங்களில் பணியாற்றும் , அனைத்து ஊழியர்களையும் மத்திய கூட்டுறவு வங்கியின் ஊழியர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பணி சம்பந்தமான சங்க சிறப்புத் துணை விதி மூலம் அமுல் செய்யும் நடைமுறையினை ரத்து செய்து, சட்ட ரீதியான வேலைப் பாதுகாப்பு, சம்பளம் போன்ற வைகளுக்காக தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தில் இடம் பெறச் செய்தல் வேண்டும்.

4. மத்திய கூட்டுறவு ஊழியர்களுக்கு உள்ளது போன்ற தற் செயல்விடுப்பு, ஈட்டியவிடுப்பு,மருத்துவ விடுப்பு, உதவி மற்றும், படிப்பு விடுப்பு போன்ற வசதிகளைச் செய்து தர வேண்டும்.

5. கூட்டுறவுச் சங்கங்களில் மத்திய வங்கியினால் நியமனம் செய்யப்படும் ஊழியர்களுக்கு, சங்கம் நட்டத்தில் இருந்தாலும் போனஸ் வழங்கும் முறையினை எங்களுக்கும் அமுல் செய்ய வேண்டும். மற்றும் பயணப்படி, கடன்கள், முன்பணங்கள் வழங்க வேண்டும்

6. கூட்டுறவுச் சங்கங்களிலும், வங்கிகளிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கு தமிழ்நாடு அரசு பொதுப் பணித் தேர்வில் முன்னுரிமை தந்து 60 சதவீதம் இடங்களை கட்டாயமாக ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

7. கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களுக்கு உரம், பூச்சி மருந்து விற்பனை இனங்களுக்கு அந்தந்த உற்பத்தியாளர் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் வழங்கும் ஊக்குவிப்பு போனஸ் எல்லா ஊழியர்களுக்கும் சம அளவில் வழங்குவதுடன், உர விற்பனை கமிசன் கணக்கிடும் முறையிலும் மாற்றம் செய்து,ஊக்கு விப்பு போனஸ் என்று தனியாக குறிப்பிட வேண்டும். இதுவரையில் வழங்கிய ஊக்குவிப்பு போனஸ் தொகையினை திரும்பச் செலுத்த, தணிக்கையில் மறுக்கப்பட்ட தொகையினை உடன் ஊழல் செய்வதை நிறுத்தி, அதனை வர வேண்டிய இனத்திலிருந்து நீக்கம் செய்ய வேண்டும்.

8. சங்கங்களின் தற்போது அத்தியாவசிய பொருட்கள் விற்பனை சம்பந்தமான எந்தவித முறையான அமைப்பு முறை களும் இல்லை, எடைகுறைவு, இயற்கையில் ஏற்படும் எடை இழப்பு

போன்ற இனங்களை பரிசீலனை செய்து அரசு தனது நுகர் பொருள் வாணிப கழகங்களுக்கு அமுல் செய்யும் முறையினை உடனடியாக கூட்டுறவுச் சேரவைச் சங்கங்களுக்கும் அமுல் செய்ய வேண்டும். இதன் மூலம் நியாயமற்ற முறையில் பழி வாங்கப் பட்ட ஊழியர்கள் மீதான நடவடிக்கையினை வாபஸ் பெற்று ஊழியர்கள் நலன் காக்கப்பட வேண்டும்.

(இ) அவைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் வருமாறு :—

கோரிக்கை 1 :

கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணியாளர் நியமனம் செய்வதும் அவர்களின் பணிவரையறை தொடர்புடைய மற்ற தன்மைகளும் கூட்டுறவுச் சங்கங்களால் கடைப் பிடிக்கப்பட்டு வரும் பணியாளர் களின் பணி வரையறை தொடர்புடைய சிறப்புத் துணைவிதி களினால் முறைப்படுத்தப்பட்டவை அத் துணைவிதிகளின்படி ஒருவர் சங்கத்தின் எந்த வேலைக்கு நியமனம் செய்யப் பட்டாலும் சாதாரணமாக மொத்தம் ஓராண்டுவரை தகுதிகாண் பருவத்தில் இருப்பார். இது முடிந்த பிறகு, அவருடைய பணியும் நடத்தையும் நிறைவுள்ளதாக இருக்குமானால் அப்பணியில் அவர் உறுதிப் படுத்தப்படுவார். மேலே கண்ட விதிகளின் படி தான் கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர்களை உறுதிப்படுத்த முடியும்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்கள் கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களாக இருப்பது அவசியமென கருதப்படுகிறது. சிறப்புத் துணைவிதிகளில் சொல்லப்பட்டுள்ள தகுதிகளை அடையா திருந்தாலும், கூட்டுறவுப் பயிற்சி பெறாமல் இருந்தாலும் எந்தப் பணியாளரையும் பணியில் தொடர்ந்து வைத்திருக்க இயலாது. கூட்டுறவுப் பயிற்சி பெறாத பணியாளர்கள் இருப்பார்களானால் அவர்கள் தங்கள் சொந்த செலவிலேயே இரண்டாண்டுகளுக்குள் பயிற்சி பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

கோரிக்கை 2 :

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் உரிமையுள்ள ஒரு தனிப் பகுதியாகும். அவற்றின் பணியாளர்களின் சம்பள விகிதங்களை அச்சங்கங்களின் நிதி நிலையைப் பொறுத்துதான் அமைக்கவேண்டி யுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் தாங்கிக் கொள்ளும் நிதிநிலை தகுதியைப் பொறுத்துதான் அதனுடைய பணியாளர்களின்

1979 மார்ச் 12]

உயர்ந்த சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. அதன்படி 1977 நவம்பர் திங்களுக்குப் பிறகு கீழ்க்கண்ட சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன :—

சம்பளம் பெறும் செயலாளர்—ரூ. 175—5—225—7½—300 மற்றும் அறுதி அகவிலைப்படி ரூ. 75.

எழுத்தர்கள்—ரூ. 150—3—180—5—230 மற்றும் அறுதி அகவிலைப்படி ரூ. 50.

கோரிக்கை 3 :

இக்கோரிக்கையில் உள்ளவைகளை கூட்டுறவு சங்கப் பதிவாளருக்கே அதிகாரம் அளிக்க, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்திலேயே ஒரு விதியமைக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

கோரிக்கை 4 :

சங்கப் பணியாளர்களுக்கு தற்செயல்விடுப்பு, ஈட்டியவிடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பு போன்றவைகளை அனுமதிக்க கூட்டுறவு சங்கங்களால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் பணிவரையறைகள் தொடர்புடைய சிறப்புத் துணைவிதிகளே வகை செய்கின்றன.

கோரிக்கை 5 :

மத்தியக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு, போனஸ் கொடுப்புச் சட்டப்படி (Payment of Bonus Act.) போனஸ் வழங்கப் படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்ற அனுப்பப்படும் மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கும், மத்திய கூட்டுறவு வங்கிகளின் போனஸ் தரப்படுகிறது. அவ்வாறு தரப்படும் போனஸ், அவர்கள் பணியாற்றும் கூட்டுறவுச் சங்கங்களால், ஆதாயத்தோடு இயங்குமானால், மத்திய வங்கிகளுக்கு ஈடுசெய்யப்படுகின்றன. இல்லையெனில் மத்திய வங்கிகளே அதை ஏற்றுக்கொள்கின்றன, போனஸ் சட்டத்தின் தேவைகள் ஏற்றுக் கொள்ளப்படுமானால், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களும் போனஸ் பெறத் தகுதியுள்ளவர்கள்.

கோரிக்கை 6 :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு தான் அரசுப் பணிகளுக்கு தேவையானவர்களைத் தேர்வு செய்கிறது. அப் பணிகளுக்குத் தேவையான தகுதியுடையவர்கள் அவைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

[1979 மார்ச் 12

கோரிக்கை 7 :

இக்கோரிக்கையில் கண்டுள்ள ஊக்குவிப்புத் தொகைகள் தரும் வழக்கம் இப்போது நடைமுறையில் இல்லை.

கோரிக்கை 8 :

ஆதார கூட்டுறவு விவசாயச் சங்கங்களின் குழுக்களே கூட்டுறவுத் துணைப்பதிவாளரைக் கலந்தாலோசித்து எடைக் குறைவு மற்றும் இயற்கையில் ஏற்படும் எடை இழப்பு ஆகியவைகளை நிர்ணயம் செய்யலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
4 - DEC 1979
MADRAS